# முக்கியமான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

Powered by:
SBI card

TATA CARDS
Put YOU first

# டாடா கார்டுகள் முக்கியமான விதிமுறைகள் & நிபந்தனைகள்

**1. *கட்டணங்கள் மற்றும் அபராதங்கள்**

A. வருடாந்திரக் கட்டணங்கள் & புதுப்பிப்புக் கட்டணங்கள்

டாடா கிரெடிட் கார்டில் (டாடா கார்டு) வருடாந்திரக் கட்டணங்கள் மற்றும் புதுப்பிப்புக் கட்டணங்கள் வசூலிக்கப்படும். வருடாந்திரக் கட்டணம் என்பது ஒரே ஒருமுறை வசூலிக்கப்படும் கட்டணம். மேலும், புதுப்பித்தல் கட்டணம் ஒவ்வொரு வருடமும் வசூலிக்கப்படும். இந்தக் கட்டணங்கள் கார்டு ஹோல்டர்களுக்கு ஏற்பவும் வெவ்வேறு வகையான கார்டுகளுக்கு ஏற்பவும் மாறுபடும். கார்டு ஹோல்டர்கள் கிரெடிட் கார்டிற்கு விண்ணப்பிக்கும் நேரத்தில் இந்தத் தகவல்கள் அவர்களுக்குத் தெரிவிக்கப்படும். இவற்றில் பொருந்தும் கட்டணங்கள் நேரடியாக கார்டு ஹோல்டரின் கணக்கிலிருந்து வசூலிக்கப்பட்டு, மாதாந்திர அறிக்கையில் பில் செய்யப்படும். முதன்மை கார்டு ஹோல்டருக்கு வழங்கப்படும் கூடுதல் கார்டுகளுக்காக தனிப்பட்ட கட்டணங்கள் விதிக்கப்படலாம்.

B. முன்பணம் எடுப்பதற்கான கட்டணங்கள்

கார்டு ஹோல்டர் உள்நாட்டு/ சர்வதேச ஏடிஎம்களில் அவசரத்திற்காக பணம் எடுக்க கார்டைப் பயன்படுத்தலாம். அம்மாதிரியாக ஒவ்வொரு முறை பணமெடுக்கும் போதும் பரிவர்த்தனை கட்டணம் வசூலிக்கப்படும். இந்தக் கட்டணமானது அடுத்த அறிக்கையில் பில் செய்யப்படும். 2.5% அல்லது ரூ.500, இதில் எது அதிகமோ அதை உள்நாட்டு ஏடிஎம்களுக்கும், 2.5% அல்லது ரூ.500 இதில் எது அதிகமோ அதை சர்வதேச ஏடிஎம்களுக்கும் பரிவர்த்தனைக் கட்டணமாக வசூலிக்கப்படும். பரிவர்த்தனைக் கட்டணமானது எஸ்பிஐ கார்ட்ஸ் & பேமென்ட் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் (எஸ்பிஐசிபிஎஸ்எல்)க்கு ஏற்றபடி மாறுபடும். நீங்கள் முன்பணமெடுக்கும் ஒவ்வொரு முறையும், கடன் பெறுவதற்கான கட்டணம் விதிக்கப்படும். இது, பணமெடுத்த தேதியிலிருந்து அதை முழுவதுமாகத் திருப்பிச் செலுத்தும் தேதி வரையிலான சுழற்சி கடனிற்கான கட்டணத்திற்குச் (கட்டணங்களின் கால அட்டவணையைப் பார்க்கவும்) சமமானதாக இருக்கும்.

C. பணம் செலுத்துதல் கட்டணங்கள்

கார்டு ஹோல்டர் தேர்ந்தெடுக்கப்பட்ட எஸ்பிஐ வங்கி கிளைகளுக்குச் சென்று, எஸ்பிஐ கிரெடிட் கார்டு நிலுவைத் தொகையை கிரெடிட் கார்டு எண் மற்றும் தொகையை செலுத்தும் சீட்டில் குறிப்பிட்டு கிளை கவுண்டரில் டெபாசிட் செய்யலாம். எஸ்பிஐ கார்டு நிலுவைத் தொகையை செலுத்திய பிறகு கார்டு ஹோல்டருக்கு உடனடி கட்டண ஒப்புதல் ரசீது வழங்கப்படும். இந்த சேவை ரூ. 250 + பொருந்தும் வரிகளுடன் கிடைக்கும்.

D. சிறப்புக் கட்டணங்கள்

i. எஸ்பிஐசிபிஎஸ்எல் ஆல் கார்டு ஹோல்டருக்கு வழங்கப்படும் குறிப்பிட்ட சேவைகளுக்காகவோ கார்டு ஹோல்டர் தன்னுடைய கணக்கில் ஏதேனும் தவணையைச் செலுத்தத் தவறினாலோ அவற்றுக்காக அவ்வப்போது பொருந்தும் அபராதங்களும் கட்டணங்களும் கார்டு ஹோல்டரிமிருந்து வசூலிக்கப்படும்.

ii அவ்வப்போது கட்டணங்களிலும் அபராதங்களிலும் ஏதேனும் மாற்றங்கள் செய்யவோ, கார்டு ஹோல்டருக்கு முன்கூட்டியே அறிவித்து பொருந்தும் புதிய கட்டணங்கள் மற்றும் அபராதங்களை விதிக்கவோ எஸ்பிஐசிபிஎஸ்எல்க்கு உரிமை உள்ளது.

E. வட்டியில்லா சலுகைக் காலம்

வணிகரால் சமர்ப்பிக்கப்படும் கிளைம்களின் அடிப்படையில் 20 முதல் 50 நாட்கள் வரை வட்டியில்லா இலவச கடன் காலம் வழங்கப்படும். இருப்பினும், முந்தைய மாதத்தில் செலுத்த வேண்டிய தொகை ஏதேனும் மீதமிருந்தாலோ கார்டு ஹோல்டர் ஏடிஎம்-லிருந்து ஏதேனும் பணம் எடுத்திருந்தாலோ இதைப் பெற முடியாது.

F. நிதிக் கட்டணங்கள் (சேவைக் கட்டணங்கள்)

கார்டு ஹோல்டர் செலுத்த வேண்டிய மீதித் தொகையை முழுவதுமாகச் செலுத்தாதசூழலில், பரிவர்த்தனை தேதியிலிருந்து செலுத்தப்படாமல் உள்ள EMI தவணைகள் உள்ளிட்ட அனைத்து பரிவர்த்தனைகள் மற்றும் கார்டு ஹோல்டர் முன்பணம் (திருப்பிச் செலுத்தப்படும்

வரை) எடுத்துள்ள அனைத்து தருணங்களுக்கும் மாதாந்திர வட்டி விகித்தத்தில் நிதிக் கட்டணங்களைச் செலுத்த வேண்டும்.

பணம் செலுத்த வேண்டிய நிலுவைத் தேதிக்குள் (PDD) கார்டு ஹோல்டர், பகுதியளவு தொகையை மட்டும் செலுத்தியிருந்தால் அல்லது மொத்த நிலுவைத் தொகையையும் (TAD) செலுத்தாமல் இருந்தால், நிதிக் கட்டணங்கள் வசூலிக்கப்படும்; உதாரணமாக, ஒரு வாடிக்கையாளர் முந்தைய மாதங்களுக்கும் தற்போதைய மாதத்திலும் நிலுவைத் தொகையைச் செலுத்தாமல் இருக்கும் பட்சத்தில், அவர் மொத்த நிலுவைத் தொகையையும் பணம் செலுத்த வேண்டிய தேதிக்கு முன்பாகவே செலுத்தினால், பணம் செலுத்தப்பட்ட தேதி வரைக்குமான நிதிக் கட்டணங்கள் வசூலிக்கப்படும்.

தற்போதைய நிதிக் கட்டண விகிதமானது பரிவர்த்தனை தேதியிலிருந்து மாதத்திற்கு 3.50% வரையானதாகவும் [ஆண்டுக்கு 42% வரையானதாகவும்] உள்ளது. இது எஸ்பிஐ கார்ட்ஸ் & பேமெண்ட் சர்வீசஸ் பிரைவேட் லிமிட்டெட் (எஸ்பிஐசிபிஎஸ்எல்)இன் விருப்பத்திற்கு ஏற்றப்படி மாறுபடும். நிதிக் கட்டணங்களில் பொருந்தும் வரிகள் வசூலிக்கப்படும். எனவே, கார்டில் செலுத்த வேண்டிய மீதித் தொகையை முழுவதுமாக செலுத்தும் வரையில், கார்டு ஹோல்டரின் கணக்கிலிருந்து நிதிக் கட்டணங்கள் பிடித்துக்கொள்ளப்படும். கார்டுஹோல்டர் பணம் செலுத்தும் தவணைத் தேதிக்குள் தனது நிலுவைத் தொகையை முழுமையாகச் செலுத்தவில்லை என்றால், அனைத்து பரிவர்த்தனைகளின் மீதும் மற்றும் பெறப்படும் அனைத்து முன்பணம் ஒவ்வொன்றிற்கும், விதிக்கப்படும் குறைந்தபட்ச நிதிக் கட்டணம், பொருந்தும் வரிகளை உள்ளடக்காமல், ரூ. 25 ஆகும்.

a. முன்பணம் மீதான நிதிக் கட்டணங்கள், பரிவர்த்தனை தேதியிலிருந்து பணம் முழுவதுமாக செலுத்தப்படும் வரையில் வசூலிக்கப்படும்.

எடுத்துக்காட்டு 1 - கார்டுக்கான அறிக்கை தேதி - ஒவ்வொரு மாதமும் 15 ஆம் தேதி.

16 ஜூன் 2019 - 15 ஜூலை 2019 க்கு இடையே செய்யப்பட்ட பரிவர்த்தனை

1. ரூ.5000- ரீடெயில் செலவு- 20 ஜூன் 2019
2. ரூ.7000 பணமாக எடுக்கப்பட்டது- 10 ஜூலை 2019

15 ஜூன் 2019 தேதியிலான அறிக்கையின்படி, கார்டு ஹோல்டர் பணம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை எனக் கருதினால், கார்டு ஹோல்டரின் 15 ஜூலை தேதியிலான அறிக்கையில், ரூ.12,000த்துடன் முன்பணமாக எடுக்கப்பட்ட ரூ. 7000-த்துக்கான நடப்பு விகிதத்துடன் கூடிய 5 நாட்களின் நிதிக் கட்டணங்களும் சேர்த்து மொத்தமாகச் செலுத்தப்பட வேண்டும் என காட்டப்படும். கார்டு ஹோல்டர் நிலுவைத் தொகையை 5 ஆகஸ்ட் 2019-க்குள், அதாவது அறிக்கை தேதியிலிருந்து 20 நாட்களுக்குள் மொத்தத் தொகையையோ குறைந்தபட்சத் தவணைத் தொகையையோ செலுத்த வேண்டும்.

உங்கள் கிரெடிட் கார்டின் நிலுவைத் தொகையை அடைக்கும் போது, முதலில் உங்கள் குறைந்தபட்சத் தவணைத் தொகை (அதாவது அனைத்து பொருந்தும் வரிகள், லோன் திட்டங்களுக்கான EMI + மொத்த நிலுவைத் தொகையின் 5% ஆகியவை), அபராதங்கள் மற்றும் பிற கட்டணங்கள் (ஏதேனும் இருந்தால்), பேலன்ஸ் டிரான்ஸ்பர் பேலன்ஸ் கட்டணம் (ஏதேனும் இருந்தால்), ரீடெயில் பேலன்ஸ் (ஏதேனும் இருந்தால்), கடைசியாக நீங்கள் செலுத்த வேண்டிய தொகை (ஏதேனும் இருந்தால்) என வரிசையாக அடைக்கப்படும்.

கடைசி அறிக்கைப் பெறப்பட்ட தேதியிலிருந்து நிதிக் கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன. ஆனால், வட்டியில்லாமல் வசூலிக்கப்பட்ட ரீடெயில் பேலன்ஸ் நிலுவைத் தொகைக்கு, பரிவர்த்தனை தேதியிலிருந்தே நிதிக்கட்டணங்கள் வசூலிக்கப்படும்.

முந்தைய அறிக்கையில் செலுத்தப்படாத தவணைத் தொகை என தற்போதைய அறிக்கையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால், அறிக்கையளிக்கப்பட்ட தேதியன்று நிலுவையிலுள்ள ரீடெயில் பேலன்ஸைப் பணம் செலுத்த வேண்டிய தேதியில் முழுவதுமாக செலுத்தும் போது, அதில் எவ்வித நிதிக் கட்டணங்களும் வசூலிக்கப்படாது.

**எடுத்துக்காட்டு** 2 - கார்டுக்கான அறிக்கை தேதி- ஒவ்வொரு மாதமும் 2 ஆம் தேதி.

3 ஜனவரி 2019- 2 பிப்ரவரி 2019-க்கு இடையே செய்யப்பட்ட பரிவர்த்தனை

1. ரூ.10,000-க்கு ரீடெயில் செலவு செய்தது- 5 ஜனவரி 2019 அன்று
2. ரூ.30,000-க்கு ஆன்லைனில் வாங்கியது - 15 ஜனவரி 2019 அன்று

2 ஜனவரி 2019 அறிக்கையில், கார்டு ஹோல்டர் முந்தைய நிலுவைத் தொகை எதுவும் செலுத்த வேண்டியதில்லை எனக் குறிப்பிட்டிருந்தால், கார்டு ஹோல்டரின் பிப்ரவரி 2க்கான அறிக்கையில் ரூ. 40,000 பரிவர்த்தனை செய்யப்பட்டதாகவும், அதைச் செலுத்த வேண்டும் எனவும் காட்டும். கார்டு

ஹோல்டர் நிலுவைத் தொகையை 22 பிப்ரவரி 2019-க்குள், அதாவது அறிக்கை தேதியிலிருந்து 20 நாட்களுக்குள், மொத்தமாகவோ குறைந்தபட்ச தவணைத் தொகையையோ செலுத்த வேண்டும்.

முந்தைய அறிக்கையில் செலுத்தப்படாத தவணைத் தொகை என தற்போதைய அறிக்கையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால், அறிக்கையளிக்கப்பட்ட தேதியன்று நிலுவையிலுள்ள ரீடெயில் பேலன்ஸைப் பணம் செலுத்த வேண்டிய தேதியில் முழுவதுமாக செலுத்தும் போது, அதில் எவ்வித நிதிக் கட்டணங்களும் வசூலிக்கப்படாது.

**ஒவ்வொரு மாதமும் வெறும் குறைந்தபட்ச நிலுவைத் தொகையை மட்டும் செலுத்தினால், நீங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகைக்குத் தொடர்ச்சியாக வட்டி செலுத்த வேண்டிவரும். இதனால், நீங்கள் வருட கணக்கில் பணத்தைச் செலுத்தும் சூழ்நிலை ஏற்படும்.**

எடுத்துக்காட்டாக, ரூ.5,000 பரிவர்த்தனைக்கு ஒவ்வொரு மாதமும் குறைந்தபட்ச நிலுவைத் தொகை செலுத்தப்பட்டால் (ஒவ்வொரு மாதமும் ரூ. 200 எனும் குறைந்தபட்ச தொகை எனும் அடிப்படையில்), மொத்த நிலுவைத் தொகையையும் முழுதாகச் செலுத்த 44 மாதங்கள் ஆகும்.

**எடுத்துக்காட்டு 3-** கார்டுக்கான அறிக்கை தேதி- ஒவ்வொரு மாதமும் 2 ஆம் தேதி.

3 மார்ச் 2019- 2 ஏப்ரல் 2019-க்கு இடையே செய்யப்பட்ட பரிவர்த்தனை

1. ரூ.500 ஆண்டு கட்டணம் செலுத்தப்பட்டது- 5 மார்ச் 2019
2. ரூ.90 பொருந்தும் வரிகள் செலுத்தப்பட்டது- 5 மார்ச் 2019
3. ரூ.6000 ஆன்லைனில் வாங்கியது - 15 மார்ச் 2019

மார்ச் 2, 2019 அறிக்கையிலிருந்து முந்தைய இருப்பு எதுவும் முன்னெடுக்கப்படவில்லை என்று கருதினால், கார்டு ஹோல்டரின் ஏப்ரல் 2 ஆம் தேதி அறிக்கையில் ரூ. 6,590 பரிவர்த்தனைகள் காட்டப்படும் கார்டு ஹோல்டர் நிலுவைத் தொகையை ஏப்ரல் 22, 2019 க்குள் அதாவது அறிக்கை தேதியிலிருந்து 20 நாட்களில், முழு தொகை அல்லது குறைந்தபட்ச தொகைக்கு இடையில் செலுத்த வேண்டும்.

22 ஏப்ரல் 2019 க்குள், கார்டு ஹோல்டர் குறைந்தபட்சத் தவணைத் தொகை ரூ.415 (மொத்த நிலுவைத் தொகையில் 5% + பொருந்தும் வரிகளைச் சேர்த்து) செலுத்தியதாக கருதினால், நிதிக் கட்டணங்களானவை நடப்பு விகிதத்தில் விதிக்கப்பட்டு, மொத்த நிலுவைத் தொகையுடன் சேர்க்கப்படும். நடப்பு விகிதம் மாதத்திற்கு 3.50% என எடுத்துக்கொண்டால், நிதிக் கட்டண கணக்கீடு பின்வருமாறு செய்யப்படும்:

49 நாட்களுக்கு ரூ. 500 நிலுவைத் தொகையாக இருந்தால் (5 மார்ச் முதல் 22 ஏப்ரல் வரை):

(3.50*12)*(49/365)*500/100=ரூ.28.19

49 நாட்களுக்குப் பொருந்தும் வரி ரூ.90 க்கு(5 மார்ச் முதல் 22 ஏப்ரல் வரை):

(3.50*12)*(49/365)*90/100=ரூ. 5.07

39 நாட்களுக்கு ரூ.6000 பேலன்ஸுக்கு (15 மார்ச் முதல் 22 ஏப்ரல் வரை):

(3.50*12)*(39/365)*6000/100=ரூ. 269.26

10 நாட்களுக்கு ரூ. 6,175 பேலன்ஸுக்கு (22 ஏப்ரல் முதல் மே 2 வரை):

(3.50*12)*(10/365)*6175/100=ரூ. 71.05

வசூலிக்கப்படும் மொத்த வட்டி = ரூ. 373.57

இதில் 3 ஏப்ரல் 2019 - 2 மே 2019-க்கு இடையே பரிவர்த்தனைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை எனக் கருதினால், வாங்கியவற்றுக்கான நிலுவைத் தொகை, வட்டிக் கட்டணங்கள் , அபராதம் மற்றும் கட்டணங்கள் மற்றும் அனைத்துப் பொருந்தும் வரிகள் (ஏதேனும் இருந்தால்) ஆகியவற்றைச் சேர்த்து மொத்த நிலுவைத் தொகையாக மே 2 தேதிக்கான அறிக்கையில் காட்டப்படும்.

கார்டு ஹோல்டர் ஒவ்வொரு மாதமும் குறைந்தபட்ச நிலுவைத் தொகையையும் (5%) வட்டித் தொகையையும் செலுத்தி வந்தால், அவரின் நிலுவைத் தொகையை 20 (100% / 5% - 20) மாதங்களில் அடைத்து விடுவார்.

பணம் செலுத்த வேண்டிய நிலுவைத் தேதிக்குள் (PDD), பகுதியளவு தொகையை மட்டும் கார்டு ஹோல்டர் செலுத்தியிருந்தால் அல்லது மொத்த நிலுவைத் தொகையையும் (TAD) செலுத்தாமல் இருந்தால் நிதிக் கட்டணம் வசூலிக்கப்படும்; உதாரணமாக, ஒரு வாடிக்கையாளர் முந்தைய மாதங்களுக்கும் தற்போதைய மாதத்திலும் நிலுவைத் தொகையைச் செலுத்தாமல் இருக்கும் பட்சத்தில், அவர் மொத்த நிலுவைத் தொகையையும்

பணம் செலுத்த வேண்டிய தேதிக்கு முன்பாகவே செலுத்தினால், பணம் செலுத்தப்பட்ட தேதி வரைக்குமான நிதிக் கட்டணங்கள் வசூலிக்கப்படும்.

உதாரணம் 4: கார்டுக்கான அறிக்கை தேதி - ஒவ்வொரு மாதமும் 2 ஆம் தேதி

3 டிசம்பர் 2018 முதல் 2 ஜனவரி 2019 தேதிக்கு இடைப்பட்ட நாட்களில் மேற்கொள்ளப்பட்ட பரிவர்த்தனைகள்

1) ரூ.500க்கு ரீடெயில் முறையில் வாங்கியது - 15 டிசம்பர் 2018

2) ரூ.600க்கு ஆன்லைனில் வாங்கியது - 20 டிசம்பர் 2018

2 டிசம்பர் 2018 அறிக்கையில் நிலுவைத் தொகை எதுவும் செலுத்தப்பட வேண்டியதில்லை என்று கருதினால், கார்டு ஹோல்டரின் ஜனவரி 2க்கான அறிக்கையில் ரூ.1100 பரிவர்த்தனை செய்யப்பட்டதாகவும், அதைத் திருப்பிச் செலுத்த வேண்டும் எனவும் காட்டும். அதாவது கார்டு ஹோல்டர் மொத்தமாக ரூ.1100 செலுத்த வேண்டி இருக்கும். இந்த நிலுவைத் தொகையை அவர் ஜனவரி 22, 2019 க்குள் செலுத்த வேண்டும். உதாரணமாக - அறிக்கையில் உள்ள தேதியிலிருந்து 20 நாட்களுக்குள் முழு தொகையையோ குறைந்தபட்ச நிலுவைத் தொகையையோ செலுத்த வேண்டும்.

கார்டு ஹோல்டர் ரூபாய் 500ஐ மட்டும் பகுதியளவு கட்டணமாக 22 ஜனவரி 2019 அன்று செலுத்துகிறார் என வைத்துக்கொண்டால், நிதிக் கட்டணங்களானவை நடப்பு விகிதத்தில் விதிக்கப்பட்டு, மொத்த நிலுவைத் தொகையுடன் சேர்க்கப்படும். நடப்பு விகிதம் மாதத்திற்கு 3.50% என எடுத்துக்கொண்டால், நிதிக் கட்டணக் கணக்கீடு பின்வருமாறு செய்யப்படும்

ரூபாய் 500 நிலுவைத் தொகைக்கு (15 டிசம்பர் முதல் ஜனவரி 22 வரை) 39 நாட்களுக்கு:

(3.50*12)*(39/365)*500/100=ரூ. 22.43

ரூபாய் 600 நிலுவைத் தொகைக்கு (20 டிசம்பர் முதல் ஜனவரி 22 வரை) 34 நாட்களுக்கு:

(3.50*12)*(34/365)*600/100=ரூ. 23.47

ரூபாய் 600 நிலுவைத் தொகைக்கு (22 டிசம்பர் முதல் ஜனவரி 2 வரை) 10 நாட்களுக்கு:

(3.50*12)*(10/365)*600/100-ரூ. 6.90

விதிக்கப்படும் மொத்த வட்டி = ரூபாய் 52.80

3 பிப்ரவரி 2019 முதல் 2 மார்ச் 2019 வரை மேற்கொள்ளப்பட்ட பரிவர்த்தனைகள்

1. 3 பிப்ரவரி 2019 ஆம் தேதி வரையான தொடக்க பேலன்ஸ் ரூபாய் 652.80
2. ரூ.1000க்கு ரீடெயில் முறையில் வாங்கியது - 5 பிப்ரவரி 2019 ஆம் தேதி
3. ரூ.3000க்கு ஆன்லைனில் வாங்கியது - 15 பிப்ரவரி 2019 ஆம் தேதி

2 பிப்ரவரி 2019 ஆம் தேதியிலான அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த பாக்கி உள்ள நிலுவைத் தொகை ரூபாய் 652.80 செலுத்தப்படவில்லை எனக் கருதினால், கார்டு ஹோல்டர் நிலுவையில் உள்ள தொகையை 22 பிப்ரவரி 2019 க்குள் செலுத்த வேண்டும். உதாரணமாக - அறிக்கையிலுள்ள தேதியிலிருந்து 20 நாட்களுக்குள் முழு நிலுவை தொகையையோ குறைந்தபட்ச நிலுவைத் தொகையையோ செலுத்த வேண்டும்.

கார்டு ஹோல்டர் பிப்ரவரி 15க்குள் பாக்கி தொகையை முழுவதுமாகச் செலுத்தி முடித்துவிட்டார் என வைத்துக்கொள்வோம். உதாரணமாக-பணம் செலுத்த வேண்டிய தேதிக்குள்ளாக நிலுவைத் தொகையைச் செலுத்துதல். நடப்பு விகிதம் மாதத்திற்கு 3.50% என கருதினால், நிதி கட்டணக் கணக்கீடு பின்வருமாறு

ரூபாய் 652.80 நிலுவைத் தொகைக்கு (பிப்ரவரி 3 முதல் பிப்ரவரி 15 வரை) 12 நாட்களுக்கு:

(3.50*12)*(12/365)*652.80/100- ரூ. 9.01

விதிக்கப்படும் மொத்த வட்டி - ரூ. 9.01

நிலுவையிலுள்ள வாங்கிய தொகை, வட்டிக் கட்டணங்கள், கட்டணங்களின் கூட்டுத்தொகை ஏதேனும் இருந்தால், மற்றும் அனைத்து பொருந்தும் வரிகளும் 2 மார்ச் தேதியிடப்பட்ட அறிக்கையில் செலுத்தப்படவேண்டிய மொத்தத் தொகையாகக் காட்டப்படும்.

**G. தாமதமாகப் பணம் செலுத்துவதற்கான அபராதங்கள்செலுத்த**

**கட்டணம் செலுத்த வேண்டிய தேதியில் குறைந்தபட்ச தொகை செலுத்தப்படாவிட்டால் தாமதமாக செலுத்தும் கட்டணங்கள் பொருந்தும்.**

**செலுத்த வேண்டிய தொகையின் மொத்த மதிப்பு ரூ.0 இல் இருந்து ரூ.500 வரை இருந்தால் எந்த அபராதமும் இல்லை;**

**செலுத்த வேண்டிய தொகையின் மொத்த மதிப்பு ரூ.500-ற்கு மேல் ரூ.1000 வரை இருந்தால் ரூ.400 அபராதம் செலுத்த வேண்டும;**

**செலுத்த வேண்டிய தொகையின் மொத்த மதிப்பு ரூ. 1000-ற்கு மேல் ரூ. 10,000 வரை இருந்தால் ரூ. 750 அபராதம் செலுத்த வேண்டும்;**

**செலுத்த வேண்டிய தொகையின் மொத்த மதிப்பு ரூ. 10,000-ற்கு மேல் ரூ. 25,000 வரை இருந்தால் ரூ. 950 அபராதம் செலுத்த வேண்டும்;**

**செலுத்த வேண்டிய தொகையின் மொத்த மதிப்பு ரூ.25,000-ற்கு மேல் ரூ.50,000 வரை இருந்தால் ரூ.1,100 அபராதம் செலுத்த வேண்டும்;**

**செலுத்த வேண்டிய தொகையின் மொத்த மதிப்பு ரூ. 50,000க்கு மேல் இருந்தால் ரூ.1,300 அபராதம் செலுத்த வேண்டும்**

**உரிய தேதிக்குள் குறைந்தபட்ச தொகை செலுத்துதல் (MAD) தொடர்ச்சியாக இரண்டு சுழற்சிகளுக்கு தவறினால், கூடுதல் தாமதமாக செலுத்தும் கட்டணம் ரூ. 100 வசூலிக்கப்படும். MAD தீர்க்கப்படும் வரை ஒவ்வொரு கட்டண சுழற்சிக்கும் இந்த கட்டணம் தொடர்ந்து விதிக்கப்படும்.**

எடுத்துக்காட்டு 1- கார்டின் அறிக்கை தேதி- ஒவ்வொரு மாதமும் 2 ஆம் தேதி.

3 ஜனவரி 16- 2 பிப்ரவரி 16க்குள் நடந்த பரிவர்த்தனை

1. ரூ. 5000க்கான ரீடெயில் முறையில் வாங்குதல் - 5 ஜனவரி 16
2. ரூ. 5000க்கான ஆன்லைன் வாங்குதல்- 15 ஜனவரி 16

2 ஜனவரி 2016 அறிக்கையின்படி, கணக்கில் பணம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை என்று கருதினால், 2 பிப்ரவரி தேதியிலான அறிக்கையில் கார்டு ஹோல்டருக்கு ரூ. 10,000 செலுத்த வேண்டி இருப்பதாகக் காட்டப்படும். 22 பிப்ரவரி 2016க்குள் நிலுவைத் தொகையைக் கார்டு ஹோல்டர் செலுத்த வேண்டும். அதாவது, அறிக்கை தேதியிலிருந்து 20 நாட்களுக்குள் மொத்த தொகையையோ குறைந்தபட்ச நிலுவைத் தொகையையோ செலுத்த வேண்டும்.

22 பிப்ரவரி 2016க்குள் அட்டைதாரர் குறைந்தபட்ச நிலுவைத் தொகையையாவது செலுத்தவில்லையெனில், அபராதமாக அவருக்கு ரூ. 750 (செலுத்த வேண்டிய தொகையின் மொத்த மதிப்பு ரூ.1000 -ற்கு மேல் 10,000 வரை இருந்தால் ரூ.750 அபராதம் கட்ட வேண்டும்)

எடுத்துக்காட்டு 2- கார்டின் அறிக்கை தேதி- ஒவ்வொரு மாதமும் 2 ஆம் தேதி.

2016 பிப்ரவரி 3 - 2016 மார்ச் 2-க்கும் இடையில் நடந்த பரிவர்த்தனைகள் பின்வருவன:

(1) ரூ.2000க்கு ரீடெயில் முறையில் வாங்கியது- 8 பிப்ரவரி 16

(2) ரூ.2500க்கு ஆன்லைனில் வாங்கியது- 19 பிப்ரவரி 16

2 பிப்ரவரி 2016 இன் அறிக்கையின்படி கணக்கில் பணம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை என்று கருதினால், 2 மார்ச் இன் அறிக்கையில் கார்டு ஹோல்டர் ரூ. 4500 பணம் செலுத்த வேண்டியதாகக் காட்டப்படும். 22 மார்ச் 2016க்குள் நிலுவைத் தொகையை அட்டைதாரர் செலுத்த வேண்டும். அதாவது, அறிக்கை தேதியிலிருந்து 20 நாட்களுக்குள் மொத்தத் தொகையையோ குறைந்தபட்ச நிலுவைத் தொகையையோ செலுத்த வேண்டும்.

22 மார்ச் 2016க்குள் கார்டு ஹோல்டர் மொத்தத் தொகையையோ அல்லது குறைந்தபட்ச நிலுவைத் தொகையையோ செலுத்தவில்லையெனில், தாமதமாக பணம் செலுத்துவதற்காக அவருக்கு ரூ. 750 (செலுத்த வேண்டிய தொகையின் மொத்த மதிப்பு ரூ.1000 -ற்கு மேல் 10,000 வரை இருந்தால் ரூ.750 அபராதம் கட்ட வேண்டும்) அபராதமாக விதிக்கப்படும்.

H. வரம்பு மீறல் கட்டணங்கள்:

டாடா கார்டு சேவையின் ஒரு பகுதியாக, கடன் வரம்பைத் தாண்டி கார்டு ஹோல்டர் செய்யும் சில பரிவர்த்தனைகளுக்கு ஒப்புதலளிக்கப்படும். கடன் வரம்பை மீறி நிலுவைத் தொகை இருந்தால், வரம்பு மீறியதற்கான கட்டணமாக 2.5% (வரம்பு மீறிய தொகையில்) அல்லது ரூ. 600, இதில் எது அதிகமோ அது வசூலிக்கப்படும். வரம்பு மீறல் நிலைமை அபராதம் மற்றும்/அல்லது வட்டிக் கட்டணங்கள் ஆகியவற்றிற்காகவும் வசூலிக்கப்படலாம்.

I. மதிப்பிழப்பு அபராதத் தொகை

குறைவாகப் பணம் செலுத்தினால், கார்டு ஹோல்டரிடம் குறைந்தபட்ச அபராதம் ரூ. 500 என்ற அடிப்படையில் செலுத்த வேண்டிய தொகையில் 2% அபராதமாக வசூலிக்கப்படும்.

J. மற்றக் கட்டணங்கள்:

- கார்டை மாற்றுவதற்கான கட்டணம்: ரூ. 100/- - ரூ. 250/- (ஆரம்-ற்கு ரூ. 1,500)
- காசோலை பணம் செலுத்துதல் கட்டணம்: ரூபாய் 100
- அறிக்கையைப் பெறுவதற்கான கட்டணம்: 2 மாதத்திற்கு மேலான அறிக்கைகள் எனில்

  அறிக்கை ஒன்றுக்கு ரூ. 100/-
- வெளிநாட்டு நாணய பரிவர்த்தனை கட்டணம்: 3.5% (எலைட் & ஆரம் தவிர அனைத்து கார்டுகளுக்கும்) மற்றும் 1.99% (எலைட் & ஆரம் கார்டு உரிமையாளர்களுக்கு மட்டும்)

  வெளிநாட்டுப் பணத்தை இந்திய ரூபாயாக மாற்றுவதற்கான பரிமாற்றக் கட்டணம் விசா/மாஸ்டர் கார்டுகளால் தீர்மானிக்கப்படும், இது டாடா கார்டின் பரிவர்த்தனைக்கான தொகையை அடைக்கும் தேதியன்று (பரிவர்த்தனை செய்யப்பட்ட தேதியிலிருந்து மாறுபட்டதாக இருக்கலாம்) உள்ள பரிமாற்றக் கட்டணத்தின் அடிப்படையில் அமைவதாகும். விசா/மாஸ்டர் கார்டால், இந்திய ரூபாய் மதிப்புக்கு மாற்றப்பட்ட தொகைக்கு வெளிநாட்டு பணப் பரிவர்த்தனைக்கான கட்டணம் வசூலிக்கப்படும். 01 டிசம்பர் 2021, முதல் வெளிநாட்டு நாணய பரிவர்த்தனை கட்டணம் பரிவர்த்தனை பணத்தைத் திரும்பப் பெறுவதற்கும் பொருந்தும்.
- டைனமிக் & ஸ்டாடிக் நாணய கர்வர்ஷனுக்கான மார்க்கப் கட்டணம்: 3.50% (எலைட் & ஆரம் தவிர அனைத்து கார்டுகளுக்கும்) மற்றும் (எலைட் & ஆரம் கார்டு உரிமையாளர்களுக்கு மட்டும்) 1.99% (ரூ. 1,000 க்கு மேல் அல்லது அதற்கு சமமான பரிவர்த்தனைகளுக்கு மட்டும்)

  சர்வதேச இருப்பிடங்களில் இருந்து இந்திய நாணயத்தை வைத்து மேற்கொள்ளப்படும் பரிவர்த்தனைக்கு அல்லது வெளிநாட்டில் பதிவு செய்து இந்தியாவில் வசிக்கும் விற்பனையாளர்களுக்கு. 01 டிசம்பர் 2021, முதல் டைனமிக் மற்றும் ஸ்டேடிக் நாணய மாற்ற மார்க்அப் கட்டணம் பரிவர்த்தனை பணத்தைத் திரும்பப் பெறுவதற்கும் பொருந்தும்
- வெகுமதி மீட்புக் கட்டணம்: ரூ. 99 (பரிசுகள், கடன் அறிக்கை மற்றும் குறிப்பிட்ட வவுச்சர்கள் மட்டுமே)

K. தவறிய தவணைகளுக்கான கட்டணங்கள்

கார்டுதாரர் செலுத்த வேண்டிய குறைந்தபட்ச தொகையை 12 மாத காலத்திற்குள் இருமுறை செலுத்தாவிட்டால், மாதத்திற்கு 3.65% (ஆண்டுக்கு 43.8) திருத்தப்பட்ட வட்டி விகிதம் வசூலிக்கப்படும். இந்த திருத்தப்பட்ட விகிதம் மீண்டும் மதிப்பாய்வு செய்யப்படுவதற்கு முன் 12 மாத காலத்திற்கு பொருந்தும். அடுத்த 12 மாதங்களில் குறைந்தபட்சம் 11 முறையாவது குறைந்தபட்ச தொகை அல்லது அதற்கு மேற்பட்ட தொகை செலுத்தப்படும்போது, வசூலிக்கப்படும் வட்டி விகிதம் பொருந்தக்கூடிய அசல் விகிதத்திற்குத் திருத்தப்படும். இந்த மாற்றம் ஷௌரியா எஸ்பிஐ கார்டைத் தவிர பாதுகாப்பற்ற சில்லறை கார்டுகளுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

வட்டி எவ்வாறு கணக்கிடப்படுகிறது என்பதை கீழே உள்ள விளக்கப்படங்கள் விளக்கும்:

கடந்த 12 மாத காலப்பகுதியில் குறைந்தபட்ச தொகை செலுத்த வேண்டிய தேதிக்கு இரண்டு முறை செலுத்தப்படவில்லை என்று வைத்துக் கொள்ளுங்கள். எனவே, ஒரு வேளை தவறினால் வட்டி விகிதம் வழக்கமான மாதம் 3.50% (42% ஏபிஆர்)-இலிருந்து மாதம் 3.65% (43.8% ஏபிஆர்)-ற்கு மாற்றப்படும். முந்தைய நிலுவைத் தொகை முழுமையாக செலுத்தப்பட்டால் மற்றும் கார்டு கணக்கில் நிலுவைத் தொகை இல்லை என்றால்.

விளக்கம் 1:

ஸ்டேட்மெண்ட் தேதி: மே 1, 2022, உரிய தேதி: மே 21, 2022

ஏப்ரல் 20, 2022 அன்று ரூ. 5000-ற்கு சில்லறைக் கொள்முதல்

ஏப்ரல் 25, 2022 அன்று ரூ. 10,000-ற்கு சில்லறைக் கொள்முதல்

மே 1 ஆம் தேதி, ரூ .15,000 மொத்த தொகை (டிஏடி) மற்றும் குறைந்தபட்ச தொகை (எம்ஏடி) ரூ. 750-ற்கு ஸ்டேட்மெண்ட் உருவாக்கப்படுகிறது

கட்டணம் செலுத்த உரிய தேதி மே 21, 2022

மே 29, 2022 அன்று ரூ. 2,000-ற்கு சில்லறைக் கொள்முதல்

நடைமுறையிலுள்ள மாதம் 3.65% வீதத்தைக் கருத்தில் கொண்டு, ஜூன் 1, 2022 ஸ்டேட்மெண்ட்டிற்கான நிதிக் கட்டணக் கணக்கீடு பின்வருமாறு செய்யப்படும்:

12 நாட்களுக்கு (ஏப்ரல் 20 முதல் மே 1 வரை) ரூ. 5,000-ற்கான சில்லரைக் கொள்முதலுக்கு:

(3.65*12)*(12/365)*5000/100 = ரூ. 72

7 நாட்களுக்கு (ஏப்ரல் 25 முதல் மே 1 வரை) ரூ. 10,000-ற்கான சில்லரைக் கொள்முதலுக்கு:

(3.65*12)*(7/365)*10000/100 = ரூ. 84

31 நாட்களுக்கு (மே 2 முதல் ஜூன் 1 வரை) மொத்தம் பாக்கி தொகை ரூ. 15,000-ற்கு

(3.65*12)*(31/365)*15000/100 = ரூ. 558

4 நாட்களுக்கு (மே 29 முதல் ஜூன் 1 வரை) ரூ. 2,000-ற்கான சில்லரைக் கொள்முதலுக்கு:

(3.65*12)*(4/365)*2000/100 = ரூ. 9.6

இதன்படி, ஜூன் 1, 2022 வசூலிக்கப்படும் மொத்த வட்டி ரூ. 723.60 மற்றும் பொருந்தக்கூடிய வரிகள் (தாமதமாக செலுத்தும் கட்டணங்களும் இங்கு பொருந்தும்) விதிக்கப்படும்.

விளக்கம் 2:

ஸ்டேட்மெண்ட் தேதி: மார்ச் 2, 2022, உரிய தேதி: மார்ச் 22, 2022

கார்டு ஸ்டேட்மெண்ட் தேதி - ஒவ்வொரு மாதமும் 2 ஆம் தேதி.

மார்ச் 3, 2022 - ஏப்ரல் 2, 2022-ற்கு இடையில் செய்யப்பட்ட பரிவர்த்தனை

மார்ச் 5, 2022 அன்று ஆண்டு கட்டணம் ரூ. 500

மார்ச் 5, 2022 அன்று பொருந்தும் வரிகள் ரூ. 90

மார்ச் 15, 2022 அன்று ரூ. 6000-ற்கு ஆன்லைன் கொள்முதல்

ஏப்ரல் 2 ஆம் தேதி, மொத்த தொகை (டிஏடி) ரூ .6,950 மற்றும் குறைந்தபட்ச தொகை (எம்ஏடி) ரூ. 415-ற்கு ஸ்டேட்மெண்ட் உருவாக்கப்படுகிறது

கட்டணம் செலுத்த வேண்டிய தேதி ஏப்ரல் 22, 2022

கார்டு உரிமையாளர் குறைந்தபட்ச தொகை ரூ. 415 ஐ, ஏப்ரல் 22, 2022 அன்று, அருகிலுள்ள தசம புள்ளிக்கு செலுத்துகிறார் என்று வைத்துக் கொண்டால், நிதிக் கட்டணங்கள் நடைமுறை விகிதத்தில் விதிக்கப்பட்டு மற்றும் மொத்த நிலுவையில் சேர்க்கப்படும்.

மாதம் 3.65% வீதத்தைக் கருத்தில் கொண்டு, மே 2, 2022 ஸ்டேட்மெண்ட்டிற்கான நிதிக் கட்டணக் கணக்கீடு பின்வருமாறு செய்யப்படும்:

49 நாட்களுக்கு (மார்ச் 5 முதல் ஏப்ரல் 22 வரை) ரூ. 500 பாக்கிக்கு:

(3.65*12)*(49/365)*500/100 = ரூ. 29.4

49 நாட்களுக்கு (மார்ச் 5 முதல் ஏப்ரல் 22 வரை) பொருந்தும் வரிகள் ரூ. 90-ற்கு:

(3.65*12)*(49/365)*90/100 = ரூ. 5.29

39 நாட்களுக்கு (மார்ச் 15 முதல் ஏப்ரல் 22 வரை) ரூ. 6000 பாக்கிக்கு:

(3.65*12)*(39/365)*6000/100 = ரூ. 280.8

10 நாட்களுக்கு (ஏப்ரல் 22 முதல் மே 2 வரை) ரூ. 6,175 பாக்கிக்கு:

(3.65*12)*(10/365)*6175/100 = ரூ. 74.1

இதன்படி, மே 2, 2022-இல் வசூலிக்கப்படும் மொத்த வட்டி ரூ. 389.59 மற்றும் பொருந்தக்கூடிய வரிகள் (தாமதமாக செலுத்தும் கட்டணங்களும் இங்கு பொருந்தும்) விதிக்கப்படும்.

நிலுவையில் உள்ள கொள்முதல் தொகை, வட்டி கட்டணங்கள், கட்டணங்கள் மற்றும் விதிப்புகள் ஏதேனும் இருந்தால், பொருந்தக்கூடிய வரிகள், ஏப்ரல் 2, 2022 - 2 மே 2022 ற்கு இடையில் கார்டு உரிமையாளர் எந்த பரிவர்த்தனையும் செய்யவில்லை என்று கருதி, இது மே 2 தேதியிட்ட ஸ்டேட்மெண்ட்டில் செலுத்த வேண்டிய மொத்தத் தொகையாக பிரதிபலிக்கும்.

கார்டு உரிமையாளர் ஒவ்வொரு மாதமும் குறைந்தபட்ச தொகை (5%) செலுத்துவதைத் தொடர்ந்தால், அவர் 20 மாதங்களில் (100% / 5% = 20) நிலுவைத் தொகையை தீர்ப்பார்.

வட்டி வீத திருத்தத்திற்குப் பிறகு கார்டு உரிமையாளர் 12 மாதங்களில் 11 முறை MAD கட்டணத்தை நிர்ணயித்த தேதிக்குள் தீர்க்கிறார் என்று கருதினால், வட்டி விகிதம் அசல் வீதமான மாதத்திற்கு 3.5% (ஆண்டுக்கு 42%) க்கு மாற்றப்படும்.

இந்த விகிதத்தில் கணக்கீட்டின் விளக்கங்களுக்கு, மிக முக்கியமான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் பிரிவு F ('நிதி கட்டணங்கள்') ஐப் பார்க்கவும்

ஏபிஆர் திருத்தத்திற்குப் பிறகு கார்டு உரிமையாளர் அடுத்த 12 மாதங்களில் MAD கட்டணத்தை ஒரு முறைக்கு மேல் தவறவிட்டதாகக் கருதினால், வட்டி விகிதம் மாதத்திற்கு 3.65% (ஆண்டுக்கு 43.8%) ஆக மேலும் 12 மாதங்களுக்கு தொடரும்.

**2. *வரம்புகள்**

கடன் வரம்பு மற்றும் ரொக்க வரம்பு ஆகியவை உட்புற எஸ்பிஜிசிபிஎஸ்எல் கடன் வரம்பின் (முதன்மையான கார்டு ஹோல்டர்களுக்கும் இணைப்பு கார்டுஹோல்டர்களுக்கும் வரம்புகள் ஒன்றானதாகவே இருக்கும்) அடிப்படையில் கார்டு ஹோல்டருக்கு ஒதுக்கப்படும். இந்த வரம்புகள் கார்டு ஹோல்டரிம் கார்டைக் கொடுக்கும்போது தெரிவிக்கப்படும். கடன் வரம்பு மற்றும் ரொக்க வரம்புகள் ஒவ்வொரு அறிக்கையிலும் கார்டு ஹோல்டருக்குத் தெரிவிக்கப்படும். அறிக்கை உருவாக்கப்படும் நேரத்தில் இருக்கும் கடன் வரம்பு (அதாவது பயன்படுத்துவதற்கு கிடைக்கும் கடன் வரம்பு) அறிக்கையின் ஒரு பகுதியாக வழங்கப்படும். எஸ்பிஜிசிபிஎஸ்எல், கார்டு ஹோல்டரின் கணக்கை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை மதிப்பாய்வு செய்து, உட்புற வரம்பின் அடிப்படையில் கார்டு ஹோல்டரின் கடன் வரம்பை அதிகரிக்கும் அல்லது குறைக்கும். தங்கள் கடன் வரம்பை அதிகரிக்க நினைக்கும் கார்டு ஹோல்டர்கள் அதற்காக எஸ்பிஜிசிபிஎஸ்எல்-க்கு விண்ணப்பிக்கலாம், அதற்காக அவர்கள் தங்களின் வருமானத்தைக் குறிப்பிடும் நிதி ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். எஸ்பிஜிசிபிஎஸ்எல்தன் விருப்பத்தின்படி, சமர்ப்பிக்கப்பட்ட புதிய ஆவணங்களின் அடிப்படையில் கார்டு ஹோல்டரின் கடன் வரம்பை அதிகரிக்கலாம்.

**3 *பில்லிங் மற்றும் அறிக்கை**

a) எஸ்பிஜிசிபிஎஸ்எல், கடைசி அறிக்கையிலிருந்து கார்டு ஹோல்டரின் கணக்கில் வரவு வைத்துள்ள தொகைகள் மற்றும் பற்று வைத்துள்ள பரிவர்த்தனைகள் ஆகியவற்றை காண்பிக்கும் ஒரு மாதாந்திர அறிக்கையை அனுப்பும். அந்த காலகட்டத்தில் கார்டு செயல்பாட்டில் இருந்திருப்பத்தை இது குறிக்கிறது. எஸ்பிஜிசிபிஎஸ்எல் ஒரு குறிப்பிட்ட தேதியில், கார்டின் கணக்கில் உள்ள பரிவர்த்தனைகளின் அறிக்கையைப் பதிவு செய்து வைத்துள்ள முகவரிக்கு அஞ்சல் செய்யும் அல்லது பதிவு செய்து வைத்துள்ள மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் செய்யும்.

b) கார்டு ஹோல்டர்களுக்கு கிரெடிட் கார்டுகள் ஒரு சுழற்சி கடன் வசதியை வழங்குகின்றன. அறிக்கையிலுள்ள குறைந்தபட்ச நிலுவைத் தொகையை மட்டும் கார்டு ஹோல்டர் செலுத்தலாம். அதை அவர் நிலுவைத் தொகையை செலுத்த வேண்டிய தேதிக்குள்ளாக (அறிக்கையில் தேதி குறிப்பிடப்பட்டிருக்கும்) செலுத்த வேண்டும். மீதமுள்ள நிலுவைத் தொகை அடுத்த அறிக்கைகளில் சேர்த்துக்கொள்ளப்படும். அட்டைதாரர் மொத்த நிலுவைத் தொகையையோ அல்லது குறைந்தபட்ச நிலுவைத் தொகையை விட அதிகமாகவோ செலுத்துவதற்குத் தேர்ந்தெடுக்கலாம். ஏதேனும் முந்தைய அறிக்கைகளின் குறைந்தபட்ச தவணைச் செலுத்தப்படாமலிருந்தால், அது அட்டைதாரர்களின் தற்போதைய குறைந்தபட்ச தவணைத் தொகையுடன் சேர்த்துக்கொள்ளப்படும், இத்துடன் அட்டைதாரர்கள் கடன் வரம்பை மீறியதற்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையும் சேர்க்கப்படும்.குறைந்தபட்ச நிலுவைத் தொகை (நிலுவைத் தொகையின் 5% அல்லது ரூ.200 இவற்றில் எது அதிகமோ அது), பொருந்தும் அனைத்து வரிகள் மற்றும் ஈஎம்ஐ (ஈஎம்ஐ அடிப்படையிலான தயாரிப்புகள் மட்டும்) ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். வரம்பை மீறி பணமெடுத்தாலோ கடன் பெற்றாலோ, அந்தக் கூடுதல் தொகையும் (OVL) குறைந்தபட்ச நிலுவைத் தொகையில் சேர்க்கப்படும். அதுமட்டுமின்றி முந்தைய அறிக்கைகளின் குறைந்தபட்சத் தவணைத் தொகை செலுத்தப்படாமல் இருந்தால், அதுவும் இதில் சேர்க்கப்படும்.

c) உங்கள் கார்டுக்கான நிலுவைத் தொகைப் பணத்தை நீங்கள் செலுத்தும்போது, அடுத்த அறிக்கையில் பணம் செலுத்தியது தொடர்பான விவரங்களும் சேர்க்கப்படும்.

இன்புட் வரி கிரெடிட்கள் தொடர்பாகவும், வரிகள் தொடர்பான மற்ற விஷயங்களிலும் உங்களுக்கு ஏதேனும் கருத்து முரண்பாடு இருந்தால், அறிக்கை வழங்கப்பட்ட 30 நாட்களுக்குள்ளாக கிரெடிட் கார்டு வழங்குநரைத் தொடர்புகொள்ளவும்.

d) கார்டு நிலுவைத் தொகைக்காக நீங்கள் செலுத்தும் பணமானது, குறைந்தபட்ச நிலுவைத் தொகை (பொருந்தும் அனைத்து வரிகள் + லோன் திட்டங்கள் மீதான ஈஎம்ஐ + மொத்த நிலுவைத் தொகையின் 5% ஆகியவற்றை உள்ளடக்கியது), அபராதங்கள் & மற்ற கட்டணங்கள், வட்டிக் கட்டணங்கள், நிலுவைத் தொகையை பேலன்ஸ் டிரான்ஸ்பர் செய்தல்,பொருட்கள் வாங்கியதில் நிலுவையிலுள்ள தொகை மற்றும் முன்பணம் எடுத்தது என வரிசையாக அடைக்கப்படும்.

கிரெடிட் கார்டு வழங்குநர், GST கட்டுப்பாடுகளுக்கு இணக்கமாக இருக்கும் விதமாக சரியான மற்றும் சமீபத்திய தகவல்களை வழங்க வேண்டியது கார்டு ஹோல்டரின் கடமையாகும். இதன்மூலமாக, கிரெடிட் கார்டு வழங்குநரால் வழங்கப்பட்டவை மீதான இன்புட் வரி கிரெடிட்டானது கார்டு ஹோல்டருக்குக் கிடைக்கும். கார்டு ஹோல்டர் தவறான தகவல்களை வழங்குவதாலோ அவரின் செயலினாலோ அவர் எதையேனும் தவிர்த்ததாலோ ஏதேனும் இன்புட் வரி கிரெடிட்டை இழந்தால் அல்லது அதைப் பெறுவதற்குத் தாமதமானால் அதற்கு கார்டு வழங்குநர் பொறுப்பாக மாட்டார்.

e) கார்டு கணக்கிற்குப் பின்வரும் வழிகளில் பணம் செலுத்தலாம்:

www.tatacard.com இணையதளத்திற்குள் உள்நுழைந்து பேநெட் தேர்வைப் பயன்படுத்தி நெட் பேங்கிங் அல்லது உங்கள் எஸ்பிஐ ஏடிஎம் மற்றும் டெபிட் கார்டு மூலமாக பணம் செலுத்தலாம்.

அறிக்கையின் பின் பக்கத்தில் வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு ஒரு காசோலை அல்லது வரைவோலை அனுப்புவதன் மூலமாக பணம் செலுத்தலாம்.

உங்கள் நகரத்தில் உள்ள எஸ்பிஐ டிராப் பாக்ஸ்கள் அல்லது உங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா கிளைகளில் ஒரு காசோலை அல்லது வரைவோலையை வழங்குவதன் மூலமாகப் பணம் செலுத்தலாம்.

காசோலை/ வரைவோலை "டாடா கார்டு எண் xxxx xxxx xxxx xxxx"-க்குப் பணம் செலுத்தும்படி இருக்க வேண்டும்.

NACH: நேஷனல் ஆட்டோமேட்டட் க்ளியரிங் (NACH) மூலமாக குறிப்பிட்ட நகரங்களில் பணம் செலுத்தலாம்.

f) டாடா கார்டு அறிக்கையில் உள்ள நிலுவைத் தொகைகளை செலுத்துவதற்குப் பல்வேறு வசதிகள் உள்ளன, இது மாதாந்திர அறிக்கையின் பின்புறத்திலும் டாடா கார்டு இணையதளத்திலும் விளக்கப்பட்டுள்ளது.

கார்டு ஹோல்டர் ஏதேனும் தொகையை முன்பணமாகச் செலுத்தினால், அது எதிர்கால செலவுகளுக்கான முன்பணமாகவே எடுத்துக்கொள்ளப்படும். கட்டணங்கள்/அபராதங்கள் எதற்கும் அதைப் பயன்படுத்த முடியாது.

g) பில்லிங் சிக்கல்கள்: அறிக்கைகளில் குறிப்பிட்டுள்ளதுபடி நிலுவைத் தொகையை கார்டுஹோல்டர் ஏற்றுக்கொண்டு, அதனைத் திருப்பிச் செலுத்த வேண்டும். ஆனால், அதில் ஏதேனும் முரண்பாடுகள் இருக்கும் பட்சத்தில் கார்டுஹோல்டர் பரிவர்த்தனை தேதியிலிருந்து 25 நாட்களுக்குள் எஸ்பிஐசிபிஎஸ்எல்க்குத் தெரிவித்தால், அவை உண்மையென எஸ்பிஐசிபிஎஸ்எல் கண்டறிந்தால், பணத்தைச் செலுத்த வேண்டியதில்லை என தற்காலிகமாக அறிவிக்கும். முரண்பாடு குறித்த தகவல்கள் கிடைக்கப்பெற்றால், அறிக்கையில் குறிப்பிட்டிருந்தபடி பணம் செலுத்துவதை எஸ்பிஐசிபிஎஸ்எல் தற்காலிகமாக தள்ளிவைக்கும். விசாரணையில், கார்டு ஹோல்டரே அந்தத் தொகைக்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது உறுதியானால், அடுத்த அறிக்கையில் செலுத்தப்பட வேண்டிய தொகை மீண்டும் சேர்க்கப்படும்.

h) வாடிக்கையாளர் குறைதீர்த்தல்: அனைத்து குறைகளும் டாடா அதிகாரி, அ.பெ. எண் 7- ஜிபீஓ, புதுடெல்லி- 110001 என்ற முகவரிக்கோ என்ற nodalofficer@sbicard.com மின்னஞ்சலுக்கோ அனுப்பப்பட வேண்டும்.

i) தொடர்பு விவரங்கள்:

அனைத்துத் தொலைபேசிகளிலிருந்தும்: 39 02 34 56 (மொபைலிலிருந்து அழைக்கும்போது உங்கள் நகரத்தின் STD குறியீட்டை முன்னால் இட வேண்டும்) அல்லது 1800 180 8282/1860 500 8282

அஞ்சல் முகவரி: மேலாளர் - வாடிக்கையாளர் சேவைகள், எஸ்பிஐ கார்ட்ஸ் & பேமெண்ட் சர்வீஸ் பிரைவெட். லிட்., டிஎல்எஃப் இன்ஃபினிடி டவர்ஸ், டவர் சி, 12வது தளம், பிளாக் 2, பில்டிங் 3, டிஎல்எஃப் சைபர் சிட்டி குர்கான்- 122002 (ஹரியானா) இந்தியா www.tatacard.com அல்லது அ.பெ. எண் 7 - ஜிபீஓ, புதுடெல்லி - 110001 எனும் முகவரிக்கு அஞ்சல் மூலமாக எழுதுவதன் மூலமாக தொடர்புகொள்ளலாம். மின்னஞ்சல்: customer.care@tatacard.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம்

J) வணிகர் ரீஃபண்ட்/கேஷ்பேக்/ பரிவர்த்தனைகள் EMI ஆக மாற்றப்பட்டதற்கு கிரெடிட் /ரத்து

செய்யப்பட்ட பரிவர்த்தனைகள் / மாற்றீடுகள் /விளம்பர கேஷ்பேக் கார்டின் நிலுவைக்கு கட்டணமாக கருதப்படாது

**4. *தவணையைச் செலுத்தத் தவறுதல்**

கார்டு ஹோல்டர் தவணையைச் செலுத்தத் தவறும் பட்சத்தில், அவருடைய கார்டில் உள்ள

நிலுவைத் தொகையைச் செலுத்தும்படி தபால், ஃபேக்ஸ், எஸ்எம்எஸ் மூலம் நினைவூட்டல்கள் அனுப்பப்படும் மற்றும்/அல்லது தவணைகளைச் செலுத்தும்படி நினைவூட்டவும் அதைப் பெறவும் மூன்றாம் தரப்பினர்களை ஈடுபடுத்தக்கூடும். அப்படி நியமிக்கப்படும் மூன்றாம் தரப்பு ஏஜென்ட்கள், கடனைத் திரும்பப்பெறுவதற்கான நடத்தை விதிமுறைக்கு முழுவதுமாகக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

எஸ்பிஜசிபிஎஸ்எல் உறுப்பினராக இருக்கும் ஆர்பிஜயில் பதிவு சான்றிதழ் பெற்ற கிரெடிட் தகவல் கம்பெனிக்கு கிரெடிட் கார்டு ஹோல்டரின் தகவலைப் வழங்குவதற்கு முன், நாங்கள் கார்டு ஹோல்டருக்குக் குறிப்பிட்ட மாதங்களுக்கு நோட்டீஸ் அனுப்புவோம்.

ஒரு கார்டு ஹோல்டர் தவணையைச் செலுத்தவில்லை எனத் தெரிவிக்கப்பட்ட பிறகு, அவருடைய தவணைகளைச் செலுத்தி முடித்திருந்தால், கார்டு ஹோல்டர் தவணையைச் செலுத்தவில்லை என கிரெடிட் கார்டு தகவல் நிறுவனத்திடம் தெரிவித்ததை எஸ்பிஜசிபிஎஸ்எல் திரும்பப் பெற்றுக்கொள்ளும். இந்த மாற்றங்கள் வாடிக்கையாளரின் கிரெடிட் அறிக்கையில் தோன்றுவதற்கு 45-60 நாட்கள் ஆகலாம்.

அதேபோல், கிரெடிட் கார்டு மீதான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் துணை/ இணைப்பு கார்டு ஹோல்டருக்கும் பொருந்தும்.

(எஸ்பிஜசிபிஎஸ்எல்) எஸ்பிஜசிபீஎஸ்எல் ஆனது பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் ஒவ்வொரு மாதமும் கார்டு ஹோல்டரின் விவரங்களைக் கிரெடிட் தகவல் நிறுவனத்திற்குச் சமர்ப்பிக்கும். கிரெடிட் தகவல் அறிக்கை நிறுவனம் 30 நாட்களுக்குள் தங்கள் சர்வரில் சமர்ப்பிக்கப்பட்ட தரவினைப் பதிவேற்றுகிறது.

தவணையைச் செலுத்தத் தவறும்போது, அட்டைதாரருக்கு அஞ்சல், தொலைநகல், தொலைபேசி, மின்னஞ்சல், எஸ்எம்எஸ் செய்தி ஆகியவற்றின் மூலம் அட்டைக் கணக்கில் உள்ள ஏதேனும் நிலுவைத் தொகையைச் செலுத்துமாறு அவ்வப்போது நினைவூட்டல்கள் அனுப்பப்படும் மற்றும்/அல்லது நினைவூட்ட, பின்தொடர மற்றும் தவணைகளை வசூலிக்க மூன்றாம் தரப்பினரை ஈடுபடுத்தலாம். நியமிக்கப்படும் ஏதேனும் மூன்றாம் தரப்பினர், கடன் வசூலிப்பதன் மீதான நடத்தை விதிமுறைகளுடன் முழுமையாக இணங்கியிருக்க வேண்டும்.

முதன்மை கார்டு ஹோல்டரின் கணக்கு திவாலானலோ அவர் இறந்தாலோ, அட்டைக் கணக்கில் உள்ள மொத்த நிலுவைத் தொகையும் கார்டின் கணக்கில் வசூலிக்கப்படாத ஏதேனும் அபராதங்களும் ஒன்றாகச் சேர்த்து எஸ்பிஜசிபிஎஸ்எல் -இடம் உடனடியாகவும் முழுமையாகவும் செலுத்தப்பட வேண்டும். அத்துடன், கார்டு கணக்கு உடனடியாக ரத்துசெய்யப்படும். முதன்மை அட்டைதாரரின் சொத்தை வைத்து, கார்டில் நிலுவையிலுள்ள தொகையைச் செலுத்த வேண்டும். மேலும் அம்மாதிரியான நிலுவைத் தொகையை மீட்பதில் ஆகும் சட்டரீதியான கட்டணங்கள் மற்றும் செலவுகள் உள்ளிட்ட அனைத்துச் செலவுகளுக்காகவும் \ எஸ்பிஜசிபிஎஸ்எல்க்கு இழப்பீடு அளிக்கப்பட வேண்டும். திரும்பச் செலுத்தும் தொகைகள் நிலுவையில் இருந்தால், தற்போதைய விகிதங்களுக்கு ஏற்ப நிதிக் கட்டணங்களைத் தொடர்ந்து வசூலிக்க எஸ்பிஜசிபிஎஸ்எல்-க்கு உரிமை உண்டு.

## 5. கார்டு ஹோல்டர்ஷிப்பை நிறுத்துதல்/தள்ளுபடி செய்தல்

a) கார்டுஹோல்டர் எஸ்பிஜசிபிஎஸ்எல்-க்கு எழுதுவதன் மூலம் அல்லது எஸ்பிஜ கார்டு உதவி மையத்தை அழைப்பதன் மூலம், மற்றும் கார்டு(களை) குறுக்காக வெட்டுவதன் மூலம் எந்த நேரத்திலும் ஒப்பந்தத்தை முடித்துக்கொள்ளலாம். இணைப்பு அட்டைகள் (ஆட்-ஆன் கார்டுகள்) உள்ளிட்ட அனைத்துக் கார்டுகளையும் எழுத்துப்பூர்வக் கோரிக்கையின் அடிப்படையில் முடித்துக்கொள்ளலாம். ஒரு அட்டைதாரர் தானாக முன்வந்து கணக்கை முடித்துக் கொள்ளும்போது, எதிர்மறையான வெகுமதி புள்ளிகள் இருப்பு இருந்தால், அத்தகைய எதிர்மறை வெகுமதி புள்ளிகளுக்கு சமமான மதிப்பு தானாகவே அறிக்கை பற்றுக்கு மாற்றப்படும், அது அட்டைதாரரால் மற்ற நிலுவைத் தொகையுடன் செலுத்தப்பட வேண்டும். கார்டில் உள்ள அனைத்து நிலுவைத் தொகையும் செலுத்தப்பட்ட பிறகே, அதை நிறுத்த முடியும். ஆண்டுதோறுமான, சேர்க்கை அல்லது புதுப்பிப்புக் கட்டணங்கள் எதுவும் ஒரு குறிப்பிட்ட விகிதத்தின் அடிப்படையில் திரும்ப அளிக்கப்பட மாட்டாது.

உதாரணம் - தானாக முன்வந்து கணக்கை முடித்துக் கொள்ளும்போது எதிர்மறை வெகுமதி புள்ளி இருப்பு: -1000

தானாக முன்வந்து கணக்கை முடித்துக் கொள்ளும்போது -1000 எதிர்மறை வெகுமதி புள்ளிகள் இருப்பு தானாக அறிக்கை பற்றுக்கு மாற்றப்படுவது ரூ. 250 அதாவது 1000 எதிர்மறை வெகுமதி புள்ளிகள் x ஒவ்வொரு வெகுமதி புள்ளிக்கும் ரூ. 0.25 (இந்த மாற்று மதிப்பு பல்வேறு அட்டை வகைகளுக்கு வேறுபட்டதாக இருக்கலாம்). இந்த தொகை அட்டைதாரரின் கணக்கில் விதிக்கப்படும், இது

அட்டைதாரரால் மற்ற நிலுவைத் தொகையுடன் செலுத்தப்பட வேண்டும்.

b) வணிக அல்லது பாதுகாப்புக் காரணங்களுக்கு அவசியமென எஸ்பிஜிசிபிஎஸ்எல் நினைத்தால் மற்றும்/அல்லது ஏதேனும் சட்ட அமலாக்கத்துறை மற்றும்/அல்லது ஏதேனும் அரசாங்க ஆணையம் கோரிக்கை செய்தால், மற்றும்/அல்லது எஸ்பிஜிசிபிஎஸ்எல் மற்றும் அதன் வாடிக்கையாளருக்குப் பொருந்தும் சட்டங்கள் & ஒழுங்குமுறைகளின் கீழ் தேவைப்பட்டால் எஸ்பிஜிசிபிஎஸ்எல் கார்டு ஹோல்டரின் கணக்கிற்கு எந்த நேரத்திலும் தடை விதிக்கலாம், அதை முடிவுக்குக் கொண்டு வரலாம் அல்லது இடைநிறுத்தலாம். கார்டு ஹோல்டர் நிலுவைத் தொகையைச் செலுத்தத் தவறினால் அல்லது கடன் வரம்பை மீறினால், கிரெடிட் கார்டு வசதியை எஸ்பிஜிசிபிஎஸ்எல் இடைநிறுத்தலாம். ஒப்பந்தம் முடிந்த பிறகோ கார்டு கணக்கைப் பயன்படுத்துவது இடைநிறுத்தப்பட்டுள்ளபோதோ அந்தக் கார்டை கண்டிப்பாகப் பயன்படுத்தப்படக் கூடாது.

c) அதுபோன்ற ஒரு சூழ்நிலையில், கார்டு ஹோல்டர் (ஏதேனும் தவணையைச் செலுத்தத் தவறுதல் அல்லது சட்ட ரீதியாக பிற அறிக்கைக்கு உட்பட்டு) உடனடியாகக் கணக்கில் நிலுவையிலுள்ள மொத்தத் தொகையையும் எஸ்பிஜிசிபிஎஸ்எல்-க்குச் க்குச் எஸ்பிஜிசிபிஎஸ்எல் செலுத்தவேண்டும். ஒப்பந்தத்தின் கீழ் கணக்கில் இன்னும் வசூலிக்கப்படாமல் இருக்கும் அனைத்துப் பரிவர்த்தனைகளையும் மற்ற தொகைகளையும் சேர்த்து, அனைத்துத் தொகைகளையும் செலுத்த வேண்டும். கார்டு ஹோல்டர் இம்மாதிரியான அனைத்து நிலுவைத் தொகைகளையும் முழுவதுமாகச் செலுத்தும் வரை கார்டு ஹோல்டரின் கணக்கு முடக்கப்படாது.

## 6. கார்டு தொலைந்துபோதல்/திருடுபோதல்/தவறாகப் பயன்படுத்தப்படுதல்

a) முதன்மை அல்லது ஏதேனும் இணைப்புக் கார்டானது மாற்றப்பட்டிருந்தால், தொலைந்து போனால், திருடப்பட்டால், உடைந்திருந்தால், சரியான தேதிக்குள் கொடுக்கப்படாவிட்டால் அல்லது கார்டு ஹோல்டரின் அனுமதி இல்லாமல் கிரெடிட் கார்டு பயன்படுத்தப்படுவதாக கார்டு ஹோல்டர் சந்தேகித்தால், கார்டு ஹோல்டர் உடனடியாக டாடா கார்டு ஹெல்ப்லைனில் உள்ள எஸ்பிஜிசிபிஎஸ்எல்க்குத் தெரிவிக்க வேண்டும். தொலைந்து போனதாகப் புகாரளிக்கப்பட்ட ஒரு கார்டு மீண்டும் கார்டு ஹோல்டருக்குக் கிடைத்தால், அதை எந்தச் சூழ்நிலையிலும் பயன்படுத்தக் கூடாது. மேலும் கார்டு ஹோல்டர் அந்த கார்டைக் குறுக்காக வெட்ட வேண்டும்.

- கார்டு ஹோல்டர் IVR அல்லது எங்கள் இணையதளம் www.tatacard.com அல்லது எஸ்எம்எஸ் சேவை மூலம் கார்டை உடனடியாகத் தடை செய்யலாம்.
- எஸ்எம்எஸ் மூலம் உங்கள் தொலைந்த/திருடப்பட்ட கார்டைத் தடைசெய்ய, நீங்கள் பதிவுசெய்த மொபைல் எண்ணிலிருந்து வெறும் BLOCK XXXX என்று 5676791 எனும் எண்ணுக்கு எஸ்எம்எஸ் செய்யவும். (XXXX = உங்கள் கார்டின் கடைசி நான்கு இலக்கங்கள் ஆகும்). உங்கள் கோரிக்கை செய்யப்பட்ட 5 நிமிடங்களுக்குள் ஒரு உறுதிப்படுத்தல் எஸ்எம்எஸ்-ஐ நீங்கள் பெறாவிட்டால், கார்டு தடை செய்யப்பட்டதாகக் கருத வேண்டாம். உங்கள் கார்டு தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தவிர்க்க, உதவி மையத்தை அழைத்து அதை உடனே தடைசெய்யுங்கள்.

b) கார்டு தொலைந்தது பற்றி எஸ்பிஜிசிபிஎஸ்எல்-இடம் தெரிவிக்கப்பட்டதற்கு முன்பு வரையில், அதில் செய்யப்பட்டிருக்கும் பரிவர்த்தனைகள் அனைத்திற்கும் கார்டு ஹோல்டரே முழுப் பொறுப்பாவார். அவை எதற்கும் எஸ்பிஜிசிபிஎஸ்எல் பொறுப்பாகாவோ பொறுப்பேற்கவோ செய்யாது. கார்டு தொலைந்தது அல்லது திருடுபோனது பற்றி எஸ்பிஜிசிபிஎஸ்எல்-இடம் தெரிவிப்பதுடன், கார்டு ஹோல்டர் கிரெடிட் கார்டு(கள்) திருடுபோனது/தொலைந்தது பற்றி காவல்துறையிடம் புகார் செய்து ஒரு எஃப்ஐஆர்-ஐப் பதிவுசெய்ய வேண்டும். இருப்பினும், கார்டு ஹோல்டர் அல்லது கூடுதல் கார்டு ஹோல்டரின் சம்மதத்துடன் ஒருவர் கார்டையோ அதன் பின்னையோ பெற்று, அதை தவறாகப் பயன்படுத்தினால் ஏற்படும் இழப்பு எல்லாவற்றிற்கும் கார்டு ஹோல்டரே பொறுப்பாவார்.

c) 06 ஜூலை 2017 அன்று தேதியிடப்பட்ட, வாடிக்கையாளர் பாதுகாப்பு மீதான இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) ஆணையின்படி - அங்கீகரிக்கப்படாத மின்னணு வங்கிப் பரிவர்த்தனைகளில் வாடிக்கையாளர்கள் நம்பகத்தன்மை முழுமையாக இல்லாததால், அங்கீகரிக்கப்படாத கிரெடிட் கார்டு பரிவர்த்தனைகள் தொடர்பாக, வாடிக்கையாளர் பாதுகாப்பை உறுதிசெய்யும் வகையில் கொள்கை ஒன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. அந்தக் கொள்கையானது டாடா கார்டின் இணையதளத்தில் "வாடிக்கையாளர் குறைதீர் கொள்கை" என்பதில் சேர்க்கப்பட்டுள்ளது. இந்தக் கொள்கையானது வெளிப்படைத்தன்மைக்கான விதிகள் மற்றும் வாடிக்கையாளர்களை நியாயமான முறையில் நடத்துதல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது.

d) கார்டு ஹோல்டர் மோசடி செய்யும் விதத்தில் நடந்துகொண்டால், அவரே அனைத்து இழப்புகளுக்கும் பொறுப்பாவார். கார்டு ஹோல்டர் கவனமின்றி நடந்துகொண்டதால் இழப்புகள் ஏற்பட்டால், அதற்கும் அவரே பொறுப்பாகலாம். எஸ்பிஜசிபிஎஸ்எல்-ஆல் குறிப்பிட்ட பாதுகாப்பு வழிமுறைகளைக் கார்டு ஹோல்டர் பின்பற்றத் தவறும் பட்சத்தில் இவை நிகழும்.

e) எஸ்பிஜசிபிஎஸ்எல் ஆனது கார்டு அல்லது பின் தொலைதல், திருட்டு போதல் அல்லது தவறாகப் பயன்படுத்துதல் ஆகியவற்றுடன் தொடர்புடையதாகக் கருதும் தகவல்களைக் கார்டு ஹோல்டர் அல்லது இணைப்புக் கார்டு ஹோல்டரிடம் தெரிவிக்காமலே காவல்துறை அல்லது மற்றத் தொடர்புடைய அதிகாரிகளிடம் அளிக்கலாம்.

f) உங்கள் கிரெடிட் கார்டு கணக்கின் மொபைல் எண் உள்ளிட்ட தொடர்பு விவரங்களில் செய்யப்படும் மாற்றங்களானது, உங்களின் புதிய மற்றும் நாங்கள் எங்கள் சிஸ்டத்தில் சேமித்துள்ள முந்தைய தொடர்பு விவரங்களுக்கு அனுப்பப்படும். எங்கள் பதிவுகளில் உள்ள உங்கள் மொபைல் எண் உள்ளிட்ட தொடர்பு விவரங்களில் அனைத்திற்கும் தற்போதைய தகவல்களை வழங்கும்படி அறிவுறுத்துகிறோம்.

g) டாடா கார்டு சில குறிப்பிட்ட தொலைந்த/திருடப்பட்ட கார்டுகளுக்கு காப்பீட்டு வசதியும் வழங்குகிறது. அந்தக் குறிப்பிட்ட காப்பீடானது ஐசிஜசிஜ லொம்பார்ட் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் அல்லது டாடா கார்டு அவ்வப்போது தீர்மானிக்கின்ற வேறு காப்பீட்டு நிறுவனங்கள் மூலம் வழங்கப்படுகிறது. இது தொடர்பான கிளைம் செட்டில்மெண்ட் அனைத்திற்கும் ஐசிஜசிஜ லொம்பார்ட் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் மட்டுமே முழுப் பொறுப்பாகும். கிளைம் செட்டில்மென்ட் தொடர்பாக எழுகின்ற எந்த முரண்பாடுகளுக்கும் டாடா கார்டு பொறுப்பு ஏற்காது. காப்புறுதி விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பற்றிய மேலும் விவரங்களுக்கு, கார்டு ஹோல்டர்கள் வெல்கம் கிட்டில் உள்ள சிற்றேட்டைப் பார்க்கவும் அல்லது www.tatacard.com என்ற இணைய தளத்தில் சென்று பார்க்கவும்.

7. **பிரகடனம்**

இந்திய நிதி அமைப்பின் செயல்பாட்டையும் நிலைப்புத்தன்மையும் மேம்படுத்தும் வகையில் இந்திய அரசாங்கத்தாலும் இந்திய ரிசர்வ் வங்கியாலும் (ஆர்பிஜ) தொடங்கப்பட்டதே கிரெடிட் தகவல் நிறுவனம். வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் இடையே தகவல்களைப் பரிமாற்றுவதற்கு பயனுள்ள செயல்முறையை வழங்கும் ஆர்பிஜயின் முயற்சிகளில் இதுவும் ஒன்றாகும். இதன் மூலம் பல்வேறு நிதி நிறுவனங்களிலிருந்து சிறப்பான 'கடன் விதிமுறைகளை' கார்டு ஹோல்டர் பெறலாம்.

கார்டு ஹோல்டரின் தகவல்களைக் கிரெடிட் தகவல் நிறுவனத்திற்கு (அது ஆர்பிஜ இடமிருந்து பதிவு சான்றிதழ் பெற்றதாக இருக்கும் பட்சத்தில்) எஸ்பிஜசிபிஎஸ்எல் பகிரலாம் என்பதற்கு கார்டு ஹோல்டர் ஒப்புதல் அளித்துள்ளார்.

எஸ்பிஜசிபிஎஸ்எல் ஆனது, கார்டு ஹோல்டர் செலுத்த வேண்டிய தொகை தொடர்பான தகவல்களை 45 -60 நாட்களுக்குள் கிரெடிட் தகவல் நிறுவனத்திற்கு வழங்க வேண்டும்.

ஏதேனும் பிரச்சனை ஏற்பட்டால், கார்டு ஹோல்டர் பணம்செலுத்தவில்லை எனப் புகாரளிப்பதற்கு முன்னதாக, புகாரளிக்கும் செயல்முறையில் தேவையான திருத்தங்களை

எஸ்பிஜசிபிஎஸ்எல் மேற்கொள்ளும். இருப்பினும், இதுபோன்ற சர்ச்சைகளை விசாரித்து, தீர்ப்பதற்கு ஆகும் காலமானது தகவல்களை அறிவித்தல்/வெளியீடுதல் ஆகியவற்றிற்கு ஆகும் காலத்தைப் பொறுத்து அமையும் என்பதையும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். கார்டு கணக்குகளின் செயல்பாடு, உறுதிப்படுத்துதல் மற்றும் பிற நிர்வாகச் சேவைகளுக்காக எஸ்பிஜசிபிஎஸ்எல் உடன் இணைப்பில் உள்ள நிதி நிறுவனம், கார்டு ஹோல்டரின் முதலாளி மற்றும் பிற மூன்றாம் தரப்பினர்களுக்கு செலுத்தப்படாமல் உள்ள தவணைகள் உள்ளிட்ட கார்டு ஹோல்டரின் தகவல்களைப் பகிர்வதற்கு எஸ்பிஜசிபிஎஸ்எல்க்கு அதிகாரம் உள்ளது என்பதைக் கார்டு ஹோல்டர் அங்கீகரித்துள்ளார்.

எஸ்பிஜசிபிஎஸ்எல் அல்லது அதன் குழு நிறுவனங்கள், துணை நிறுவனங்கள், இணை நிறுவனங்கள் மற்றும்/அல்லது கூட்டு நிறுவனங்கள் ஆகியவற்றின் பல்வேறு தயாரிப்புகளையும் சேவைகளையும், சந்தைப்படுத்துவதற்காகவும் விற்பதற்காகவும் எஸ்பிஜசிபிஎஸ்எல் ஆனது அதனுடைய முதன்மை, துணை, இணை அல்லது கூட்டு நிறுவனங்கள் எதற்கும் கார்டு ஹோல்டரின் தகவல்களைப் பகிரலாம் என்பதற்குக் கார்டு ஹோல்டர் ஒப்புதல் அளித்துள்ளார்.

டாடா கார்டின் முக்கியமான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை www.tatacard.com எனும் இணைய முகவரியில் பார்க்கலாம்

முக்கியமான ஒழுங்குமுறை தொடர்பான தகவல்

- கார்டானது இந்தியாவில் மட்டுமல்லாமல் வெளிநாட்டிலும் செல்லுபடியாகும். இருந்த போதிலும், இதன்மூலம் நேபால் மற்றும் பூடான் நாடுகளில் வெளிநாட்டு நாணயப் பரிமாற்றங்களை செய்ய இயலாது. (செல்லுபடி ஆகாது).

- இந்தியாவிற்கு வெளியே பரிவர்த்தனைக்காக கார்டைப் பயன்படுத்தும் போது, ஆர்பிஐயின் பணப்பரிமாற்றக் கட்டுப்பாடு ஒழுங்குமுறைகள் மற்றும் வெளிநாட்டுப் பணப்பரிமாற்ற மேலாண்மைச் சட்டம், 1999 உள்ளிட்ட பொருந்தும் சட்டங்களுக்கு உட்பட்டு பரிவர்த்தனைகளை மேற்கொள்ள வேண்டும். இணையவழியான போர்ட்டல்கள் மூலம் வெளிநாட்டுப் பணபரிவர்த்தனைகளை மேற்கொள்வது அனுமதிக்கப்படுவதில்லை. ஏதேனும் விதிகளை மீறினால் அல்லது விதிகளுக்கு இணங்க மறுத்தால், நீங்கள் தண்டனைக்குரியவராவீர்கள் என்பதைக் கவனத்தில் கொள்க. நீங்கள் உங்கள் அந்நியச் செலாவணி உரிமம் குறித்து உங்கள் அங்கீகரிக்கப்பட்ட முகவரிடம் (ஏடி) பரிசீலிக்க வேண்டும்

- உங்கள் கிரெடிட் கார்டு கணக்கில் ஏதேனும் பேலன்ஸ் இருந்தால் டாடா கார்டு உங்களுக்கு அதைத் திருப்பி தர உரிமை உண்டு.

- வெளிநாட்டு நிறுவனங்களில் முதலீடு செய்வது அல்லது வெளிநாட்டில் நிறுவனங்களைத் தொடங்குவது போன்ற சொத்துடைமைகளை மாற்றக்கூடிய பரிவர்த்தனைகளில் பணம் அனுப்ப/பணம் செலுத்த கிரெடிட் கார்டுகளைப் பயன்படுத்த வேண்டாம். இத்தகைய பரிவர்த்தனையானது ஆர்பிஐயின் மாஸ்டர் டைரக்ஷனால் (வெளிநாட்டில் உள்ள கூட்டு நிறுவனங்களில் (ஜாயின்ட் வென்டார்) அல்லது சொந்த நிறுவனத்தில் நேரடியாக முதலீடு செய்தல்) அங்கீகரிக்கப்படுதில்லை.

- இந்திய குடிமக்களுக்கான பலதரப்பட்ட வெளிநாட்டுப் பரிவர்த்தனைகள் மீதான ஆர்பிஐயின் மாஸ்டர் சர்குலரில் குறிப்பிட்டுள்ளதுபடி, லாட்டரி டிக்கெட்கள், தடைசெய்யப்பட்ட அல்லது தடுக்கப்பட்ட இதழ்களை வாங்குதல், குலுக்கலில் பங்கேற்றல், கால்-பேக் சேவைகளுக்குப் பணம் செலுத்துதல் போன்ற தடைசெய்யப்பட்ட விஷயங்களுக்காக வெளிநாட்டுப் பணப்பரிவர்த்தனைகளை மேற்கொள்வது அனுமதிக்கப்படுவதில்லை என்பதால் கிரெடிட் கார்டை இந்தச் செயல்களுக்குப் பயன்படுத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் விவரங்களுக்கு இந்திய குடிமக்களுக்கான பலதரப்பட்ட வெளிநாட்டுப் பரிவர்த்தனைகள் மீதான ஆர்பிஐயின் மாஸ்டர் சர்குலரைப் பார்க்கவும்.

## 8: *கட்டணங்களின் பட்டியல்

| கட்டணங்கள் | |
|---|---|
| ஆண்டுக் கட்டணம் (ஒரு முறை) | ரூ. 0 - ரூ. 2,999 |
| புதுப்பிப்புக் கட்டணம் (ஆண்டு ஒன்றுக்கு) | ரூ. 0 - ரூ. 2,999 |
| இணைப்புக் கட்டணம் (ஆண்டு ஒன்றுக்கு) | எதுவுமில்லை |
| **நீட்டிக்கப்பட்ட கடன்** | |
| வட்டியில்லா கடன் காலம் | 20-50 நாட்கள் (முந்தைய மாதத்தின் நிலுவைத் தொகை முழுதாகச் செலுத்தப்பட்டிருக்கும் பட்சத்தில், ரீடெயில் முறையில் பணம் செலவு செய்வதற்கு மட்டுமே பொருந்தும்) |
| நிதிக் கட்டணம் | மாதம் 3.50% (ஆண்டிற்கு 42%) பாதுகாப்பு உறுதி செய்யப்படாத கார்டுகளுக்கு; பாதுகாப்பு உறுதி செய்யப்பட்ட கார்டுகளுக்கு மாதம் 2.5% (ஆண்டிற்கு 30%) முதல் 2.75% (ஆண்டிற்கு 33%) வரை, செப் 01, 2021 முதல் மாற்றப்படும். |
| குறைந்தபட்ச நிதி கட்டணங்கள்: | ரூ .25 |
| தவறிய தவணைகளுக்கான கட்டணங்கள் | 12 மாதங்களில் (பாதுகாக்கப்பட்ட மற்றும் ஷௌரியா கார்டுகளைத் தவிர) இரண்டு முறை குறைந்தபட்ச தொகை உரிய தேதியில் செலுத்தப்படாவிட்டால் மாதத்திற்கு 3.65% (ஆண்டுக்கு 43.8%) ஆக இருக்கும். |
| குறைந்தபட்ச நிலுவைத் தொகை | மொத்த நிலுவைத் தொகையில் 5% (குறைந்தபட்சம் ரூ.200) + அனைத்து பொருந்தும் வரிகள் + ஈஎம்ஐ (ஈஎம்ஐ அடிப்படையிலான தயாரிப்புகள் எனில்) + OVL தொகை (ஏதேனும் இருந்தால்) |
| **முன்பணம் எடுத்தல்** | |
| முன்பணம் எடுப்பதற்கான வரம்பு | கடன் வரம்பில் 80% வரை (டைட்டானியத்திற்கு அதிகபட்சம் 12 ஆயிரம்/நாள் மற்றும் பிளாட்டினம் கார்டுகளுக்கு 15 ஆயிரம்/நாள்) |
| இலவச கடன் காலம் | எதுவுமில்லை |

| | |
|---|---|
| நிதிக் கட்டணம் | மாதம் 3.50% (ஆண்டிற்கு 42%) பாதுகாப்பு உறுதி செய்யப்படாத கார்டுகளுக்கு; பாதுகாப்பு உறுதி செய்யப்பட்ட கார்டுகளுக்கு மாதம் 2.5% (ஆண்டிற்கு 30%) முதல் 2.75% (ஆண்டிற்கு 33%) வரை, செப் 01, 2021 முதல் மாற்றப்படும்.<br><br>மேற்கூறிய கட்டணங்கள் பணம் எடுக்கப்பட்ட நாளிலிருந்து பொருந்தும். |
| குறைந்தபட்ச நிதி கட்டணங்கள் | ரூ .25 |
| தவறிய தவணைகளுக்கான கட்டணங்கள் | 12 மாதங்களில் (பாதுகாக்கப்பட்ட மற்றும் ஷௌரியா கார்டுகளைத் தவிர) இரண்டு முறை குறைந்தபட்ச தொகை உரிய தேதியில் செலுத்தப்படாவிட்டால் மாதத்திற்கு 3.65% (ஆண்டுக்கு 43.8%) ஆக இருக்கும். |
| **முன்பணம் எடுப்பதற்கான கட்டணங்கள்** | |
| எஸ்பிஐ ஏடிஎம்கள்/ மற்ற உள்ளூர் ஏடிஎம்கள் | பரிவர்த்தனைத் தொகையில் 2.5% (குறைந்தபட்சம் ரூ.500 என்ற அடிப்படையில்) |
| சர்வதேச ஏடிஎம்கள் | பரிவர்த்தனைத் தொகையில் 2.5% (குறைந்தபட்சம் ரூ.500-என்ற அடிப்படையில்) |
| **மற்றக் கட்டணங்கள் & அபராதங்கள்** | |
| பணம் செலுத்துவதற்கான கட்டணம் | ரூ. 250 |
| மதிப்பிழப்பு அபராதத் தொகை | கட்டணத் தொகையில் இருந்து 2% (குறைந்தபட்சம் ரூ.500 என்ற அடிப்படையில்) |
| பணப்பரிவர்த்தனை அறிக்கைக் கட்டணம் | அறிக்கை ஒன்றுக்கு ரூ.100( > 2 மாதங்கள் பழையது) |
| காசோலை பணம் செலுத்துதல் கட்டணம் | ரூ.100 |
| **தாமதமாகப் பணம் செலுத்துதல்** | **செலுத்த வேண்டிய தொகையின் மொத்த மதிப்பு ரூ.0 இல் இருந்து ரூ. 500 வரை இருந்தால் எந்த அபராதமும் இல்லை;**<br><br>**செலுத்த வேண்டிய தொகையின் மொத்த மதிப்பு ரூ. 500-ற்கு மேல் ரூ. 1000 வரை இருந்தால் ரூ. 400 அபராதம் செலுத்த வேண்டும;**<br>**செலுத்த வேண்டிய தொகையின் மொத்த மதிப்பு ரூ. 1000-ற்கு மேல் ரூ. 10,000 வரை இருந்தால் ரூ. 750 அபராதம் செலுத்த வேண்டும்;** |

| | |
|---|---|
| | **செலுத்த வேண்டிய தொகையின் மொத்த மதிப்பு ரூ. 10,000-ற்கு மேல் ரூ. 25,000 வரை இருந்தால் ரூ. 950 அபராதம் செலுத்த வேண்டும்;**<br>**செலுத்த வேண்டிய தொகையின் மொத்த மதிப்பு ரூ. 25,000-ற்கு மேல் ரூ. 50,000 வரை இருந்தால் ரூ. 1,100 அபராதம் செலுத்த வேண்டும்;**<br>**செலுத்த வேண்டிய தொகையின் மொத்த மதிப்பு ரூ. 50,000க்கு மேல் இருந்தால் ரூ. 1,300 அபராதம் செலுத்த வேண்டும்** |
| **கூடுதல் தாமத செலுத்தல் கட்டணம்** | **ரூ. 100** |
| வரம்பை மீறி பணமெடுத்தல் | வரம்பு மீறி எடுக்கப்பட்ட தொகையில் 2.5% (குறைந்தபட்சம் ரூ.600 என்ற அடிப்படையில்) |
| அட்டையை மாற்றுதல் | ரூ.100- ரூ,250 ஆரம்-ற்கு ரூ. 1500) |
| அவசரநிலை அட்டையை மாற்றுதல் (வெளிநாட்டில் இருக்கும்போது) | உண்மையான விலை (குறைந்தபட்சம் $175 VISA-விற்கு மற்றும் $148 Mastercard-ற்கு என்ற அடிப்படையில்) |
| வெளிநாட்டுப் பணப் பரிவர்த்தனை | பரிமாற்றத்திற்கான மார்க் அப்: 3.5% 01 டிசம்பர் 2021, முதல் பரிவர்த்தனை திருப்பிச் செலுத்துதலுக்கும் பரிமாற்ற மார்க்அப் கட்டணம் பொருந்தும் |
| டைனமிக் & ஸ்டாடிக் கரன்ஸி கர்வர்ஷனுக்கான பரிவர்த்தனை | மார்க்கப் கட்டணம் 3.50% (ரூ .1000 க்கு மேல் அல்லது அதற்கு சமமான பரிவர்த்தனைகளுக்கு மட்டும்) 01 டிசம்பர் 2021, முதல் பரிவர்த்தனை பணத்தைத் திரும்பப்பெறுவதற்கும் மார்க்அப் கட்டணம் பொருந்தும். |
| வெகுமதி மீட்புக் கட்டணம் | ரூ. 99 (பரிசுகள், கடன் அறிக்கை மற்றும் குறிப்பிட்ட வவுச்சர்கள் மட்டுமே) |
| பிரையாரிட்டி பாஸ் லவுன்ஜூக்கான கட்டணங்கள் | பிரையாரிட்டி பாஸ் திட்டத்தின் மூலம் இந்தியாவில் உள்ள அனைத்து விமான நிலையங்களின் லவுன்ஜ்களையும் பயன்படுத்த ஒவ்வொரு முறையும் $27 + பொருந்தும் வரிகள், கட்டணமாக வசூலிக்கப்படும். |

| | |
|---|---|
| | லவசப் பயன்பாட்டிற்குப் பிறகு, பிரையாரிட்டி பாஸ் திட்டத்தின் மூலம் இந்தியாவுக்கு வெளியே உள்ள அனைத்து விமான நிலையங்களின் லவுன்ஜ்களையும் பயன்படுத்த ஒவ்வொரு முறையும் $27 + பொருந்தும் வரிகள், கட்டணமாக வசூலிக்கப்படும். மேலும் விவரங்களுக்கு tatacard.com ஐப் பார்க்கவும்<br>பிரையாரிட்டி பாஸ் வைத்துள்ள டாடா கார்டு ஹோல்டருடன் பயணிக்கும் அனைத்து விருந்தினர்களும், விமான நிலையத்தில் உள்ள லவுன்ஜை பயன்படுத்த ஒவ்வொரு முறையும் $27+ பொருந்தும் வரிகள் கட்டணமாக வசூலிக்கப்படும். |
| **கூடுதல் கட்டணம்** | |
| ரயில்வே பயணச்சீட்டுகள்<br>- ரயில்வே கவுன்டர்கள் | ரூ.30 + பரிவர்த்தனைத் தொகையில் 2.5% |
| ரயில்வே பயணச்சீட்டுகள் - www.irctc.co.in | பரிவர்த்தனைத் தொகையில் 1.8% + பொருந்தும் வரிகள் |
| பெட்ரோல் & அனைத்து விற்கப்பட்ட தயாரிப்புகள்/சேவைகள்பெட்ரோல் பம்புகளில் | பரிவர்த்தனை மதிப்பில் 1% குறைந்தபட்ச கட்டணம் ஒரு பரிவர்த்தனைக்கு ரூ.10 (பொருந்தக்கூடிய எல்லா வரிகளையும் தவிர்த்து + மற்ற கட்டணங்கள்) ஒற்றை பரிவர்த்தனையில் பிளாட்டினம் கார்டுகளுக்கு ரூ .500 முதல் ரூ .4000 வரை; மற்றும் மற்ற அனைத்து கார்டுகளுக்கும் ரூ .500 மற்றும் ரூ .3000.<br>அதிகபட்ச கூடுதல் கட்டணம் தள்ளுபடி பிளாட்டினம் கார்டுகளுக்கான கிரெடிட் கார்டு கணக்கிற்கு ஒரு அறிக்கை சுழற்சிக்கு ரூ .250; மற்றும் மற்ற அனைத்து கார்டுகளுக்கும் ஒவ்வொரு கிரெடிட் கார்டு கணக்கிற்கு ரூ .100 ஆகும் |
| சுங்கவரி கட்டணம் | பரிவர்த்தனைத் தொகையில் 2.25% (குறைந்தபட்சம் ரூ.75 என்பதன் அடிப்படையில்) |

மேலேயுள்ள கட்டணங்கள், வட்டிகள் & அபராதங்கள் அனைத்திலும் அனைத்துப் பொருந்தும் வரிகளும் வசூலிக்கப்படும்.

"பொருந்தக்கூடிய வரிகள் என்பவை" (2017 ஆம் ஆண்டு ஜூலை 1 ஆம் தேதி அல்லது அதற்குப் பின் வெளியிடப்பட்ட அறிக்கைகளுக்கு):

- டாடா கார்டு பதிவுகளின்படி, "ஹரியானா" மாநிலத்தில் வசிப்பவராக இருக்கும் கார்டு ஹோல்டர்களுக்கு - "மத்தியவரி" @9% மாநிலவரி @9%
- டாடா கார்டு பதிவுகளின்படி, "ஹரியானா" அல்லாத வேறு மாநிலத்தில் வசிக்கும் கார்டு ஹோல்டர்களுக்கு, ஒருங்கிணைந்த வரி @18%

  கார்டு ஹோல்டர் கணக்கில் ஒவ்வொரு முறை பணம் செலுத்தும் போதும், முதலில் குறைந்தபட்ச நிலுவைத் தொகை (பொருந்தும் அனைத்து வரிகள் + EMI அடிப்படையிலான பொருட்களுக்கான EMI + மொத்த நிலுவைத் தொகையின் 5% ஆகியவற்றை உள்ளடக்கியது), அபராதங்கள் & மற்ற கட்டணங்கள், வட்டிக் கட்டணங்கள், நிலுவைத் தொகையை பேலன்ஸ் டிரான்ஸ்பர் செய்தல்,பொருட்கள் வாங்கியதில் நிலுவையிலுள்ள தொகை மற்றும் முன்பணம் எடுத்தது என வரிசையாக அடைக்கப்படும்.

நீங்கள் கார்டைத் தொடர்ந்து பயன்படுத்தினால், இந்தத் திருத்தங்களை ஏற்றுக் கொண்டதாக பொருள்படும்.

## டாடா கார்டு ஹெல்ப்லைன்

39 02 34 56 (உள்ளூர் STD குறியீட்டை முன்னால் சேர்க்கவும்)

1800 180 8282/1860 500 8282

செப்டம்பர் 2019 இன் படி இதில் குறிப்பிட்டுள்ள தகவல்கள் அனைத்தும் சரியானவையே, மேலும் இவை எஸ்பிஐசிபிஎஸ்எல் விருப்பத்திற்கேற்ப மாறுபடலாம். டாடா கார்டின் முக்கியமான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை www.tatacard.com இணையதளத்தில் பார்க்கலாம்.

எஸ்பிஐ கார்ட்ஸ் & பேமென்ட் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்.
அஞ்சல் பெட்டி எண். 28, புது டெல்லி - 110 001
இங்கு எங்கள் வலைதளத்தைப் பார்வையிடவும்: www.sbicard.com

Ver: FY22 10